**SC No.79/2018 Date:19.12.2024**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )

சாட்சியாகிய திரு. தணிகா என்ற **Pw4** நபரின் வாக்குமூலம் (**1876**ம் ஆண்டின் **10** விதியின் **Tr.A.Pachaiyappan,** இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்

செய்யப்படுகிறது.

பெயர் - திரு. தணிகா

த/பெ, - திரு. சேகர்

வயது - **36**

தொழில் - ஓட்டுநர்ட

முதல் விசாரணை:

நான் தற்போது காஞ்சிபுரம் கோனேரி குப்பம் தலையாரி தெருவில் குடி இருக்கிறேன். ஓட்டுநராக வேலை செய்கிறேன். **14 5 2008** அன்று நான் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் தனியார்அவசர ஊர்தி மற்றும் தானியங்கி வாகனத்தில் ஓட்டுநராக பணியாற்றிக் கொண்டு இருந்தபோது காஞ்சிபுரம் நிர்வாகஅலுவலர் ராமலிங்கமும் அவரது உதவியாளரும் என்னிடம் வந்து யாரோ ஒரு நபர் இறந்து விட்டதாகவும் வல்லம் தோண்ட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டதன் பேரில் நான் ஐயப்பன் தனிகா மகபூப் பாட்ஷா ஆகியோர் ஆகியோர்**11** மணி அளவில் கிளம்பி கைலாசநாதர் மேற்கு தெருவில் சிவன் கோவிலுக்கு அருகே **12** முக்கால் மணிக்கு போய் சேர்ந்தோம். அந்த இடத்தில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மருத்துவர் போலீசார் மற்றும் தாசில்தார் இருந்தார்கள். கொலை செய்து புதைக்கப்பட்டுள்ள நபரை தோண்ட வேண்டும் என்று சொன்னதன் பேரில் அங்கு புதர்கள் புதர்கள் மற்றும் செடிகள் இருந்ததால் அன்றைய தினம் தோண்டவில்லை. அந்த இடத்து உள்ள குழியை தேவராஜ் என்பவர் காட்டினார். பின்பு ஏகாம்பரநாதர் சன்னதி தெருவில் உள்ள ஒரு

நூலகத்தில் பின்புறம் தேவராஜ் மற்றும் ஒரு நபர் காண்பித்த இடத்தை நாங்கள் நான்கு பேரும் தோண்டினோம். அந்த இடத்தில் எலும்புக்கூடுகள் இருந்தது. அதை மருத்துவர்கள் எடுத்து ஆய்வு செய்தார்கள்.அதன் பின்பு மாலை **3** மணி அளவில் ஒளி முகமது பேட்டை அருகில் உள்ள அரிசி ஆலை அருகில். உள்ள இடத்தை தோண்ட சொல்லி நாங்கள் தோன்றிய போது ஒரே குழியில் இரண்டு நபர்கள் புதைக்கப்பட்டிருந்தார்கள். இரண்டு நபர்களின் எலும்புக்கூடுகள் அங்கு இருந்தது. நாங்கள் முழுவதும் மண்ணை எடுத்த பிறகு மருத்துவர்கள் அதை எடுத்துக் கொண்டார் ஆய்வு செய்தார்கள். போலீசார் விசாரி த்தார்கள்.

குறுக்கு விசாரணை

போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றால் இல்லை. போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரி அல்ல. கிராம நிர்வாக அலுவலரும் அவரது உதவியாளரும் என்னை அன்றைய தினம் காலை **11** மணிக்கு அழைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் குழி தோண்டிதற்காக கூலி பெற்ற ரசீதை போலீசார் விசாரணையில் ஒப்படைக்கவில்லை.